# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2009 / 2010 HELD IN AUGUST - 2010

## BBA / COM 15 – MANAGEMENT AND ENTREPRENEURIAL SKILLS

**எல்லா வினாக்களுக்கும் விடைதருக**

**நேரம் : 03 மணித்தியாலம்**

---

01 அ) முகாமையாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய முகாமைத்துவ திறன்கள் முயற்சியாண்மையாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய முயற்சியாண்மை பண்புகள் இரண்டையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(05 புள்ளிகள்)

ஆ டெய்லரினது நான்கு (04) முகாமைத்துவ தத்துவங்களுக்கும் பாயோலினது பதிநான்கு (14) முகாமைத்துவ தத்துவங்களுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.

(09 புள்ளிகள்)

இ) 'சில ஆரம்ப நிறுவன நடத்தை ஆதரவாளர்கள் முகாமைத்துவத்திற்கு தமது பங்களிப்பினை ஆற்றியுள்ளனர்', இப்பங்களிப்பினை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

02. அ) முறையான திட்டமிடல் படிமுறைக்கு ஸ்வொட் (SWOT) பகுப்பாய்வினது பயன்பாட்டினை விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) பெரும்பாலான நிறுவனங்கள் குழுத்தீர்மானம் எடுத்தலை விரும்புகின்றன, மூளைமோதல் (Brain Stroming) ஒரு குழுத்தீர்மான முறையாகும். மூளை மோதல் முறை மூலம் குழுத் தீர்மானம் எடுக்கும் விதத்தினை உண்மையான உதாரணம் ஒன்றின் உதவியுடன் விளக்குக.

(05 புள்ளிகள்)

இ) தாயமுறை நிறுவனக் கட்டமைப்பின் (matrix organization structure) பண்பினையும் அதன் தீமைகளையும் கவனமாக மதிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ஈ) 'மாற்றத்திற்கான தடையினை முகாமை செய்வதில் மாற்றத்திற்கான சரியான நேரம் என்பது ஒரு காரணியாகும்' இக்கூற்றினை பகுப்பாய்வு செய்க.

(05 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

03) அ) 'ஊழியர்களை முன்னேற்றுவதற்காக செலவிடப்படும் பணம் ஒரு கவர்ச்சிகரமான முதலீடாகும்' இக்கூற்றினை மனித வளத்திற்கான செலவு மூலங்களும் மனிதவளத்திலிருந்தான வருவாயும் என்பதுடன் தொடர்புபடுத்தி விவாதிக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) நிறுவன காலநிலை வகைகளைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

இ) தலையீடற்ற தலைமைத்துவம் (laissez- faire-reign leadership) எந்த நிபந்தனையின் கீழ் மிகவும் விரும்பப்படும். விளக்குக.

(05 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

04. அ) மக்றேகரின் X கோட்பாடும் Y கோட்பாடும் (McGregor's theory X and Y) எந்தவொரு நிறுவனத்திலும் காணப்படக்கூடிய ஊழியர் வகைபற்றிக் குறிப்பிடுகிறது. இக்கோட்பாட்டின் அடிப்படையில் ஊழியர் தூண்டுதலுக்கான தேவைபற்றி விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) நிறுவனத் தொடர்பாடல் செல்லக்கூடிய பாதை (organizational communication flow) வழிகளை விபரிக்குக.

(05 புள்ளிகள்)

இ) கட்டுப்படுத்தல் செய்முறையில் MBWA (தேடியறிதல் முகாமைத்துவம்) யின் பயன்பாட்டினை விளக்குக.

(04 புள்ளிகள்)

ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு ஒரு கட்டுப்படுத்தல் நுட்பமாகும், இப்பாதீட்டுக் கட்டுப்பாட்டு நுட்பத்தின் சில நன்மைகளைக் கூறுக.

(06 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

05. அ) 'முயற்சியாண்மை' 'வேலைவாய்ப்பின்மை' ஆகிய பதங்களை இலங்கையை மையமாக வைத்து தொடர்புபடுத்துக.

(05 புள்ளிகள்)

ஆ) முயற்சியாண்மையாளர் ஒருவருக்கான சமூகப்பொறுப்புணர்வு பற்றி சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

இ) 'குடும்ப வியாபாரமொன்றினை ஆரம்பிப்பது முயற்சியாண்மையை உருவாக்குவதற்கான ஒரு வழியாகும்'. இவ்வழியில் உள்ள விஷேடமான நன்மையினை விரிவாக விளக்குக.

(06 புள்ளிகள்)

ஈ) சவால், இடரினை எதிர்கொள்ளல், புத்தாக்கம் என்பன முயற்சியாண்மையின் பண்புகளாகும். இவற்றின் அடிப்படையில் முயற்சியாண்மையின் தீமைகளை விளக்குக.

(04 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**